Government of **Western Australia**
**School Curriculum and Standards Authority**

# ஆன்லைன் வேஸ் (WACE) மொழி விண்ணப்பத்திற்கான மாணவர்சரிபார்ப்பு பட்டியல்

உங்கள் விண்ணப்பத்தைத் தொடங்குவதற்கு முன்பு உங்களுக்குத் தேவையான அனைத்தும் உங்களிடம் இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள இந்த சரிபார்ப்பு பட்டியலைப் பயன்படுத்தவும். உங்கள் ஆன்லைன் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்ய, நீங்கள் வீட்டிலோ பள்ளியிலோ ஒரு கணினியைப் பயன்படுத்த வேண்டும். உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், உங்களுக்கு உதவுமாறு உங்கள் பெற்றோர்/கள் அல்லது பாதுகாவலர்/கள் அல்லது உங்கள் மொழி ஆசிரியரிடம் கேளுங்கள்.

## 1 மாணவர் இணைய முகப்பில் உள்நுழைக

மாணவர் இணைய முகப்பில் உள்நுழைய, உங்கள் **WA மாணவர் எண்** உங்களுக்குத் தேவைப்படும், இது உங்கள் பள்ளி அறிக்கை/களில் காணப்படும். இது உங்கள் ஸ்மார்ட்ரைடரிலும் (SmartRider) இருக்கலாம். உங்களுக்கு ஓர் **தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரி** தேவைப்படும். மேலும் உங்கள் ஆன்லைன் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும்போது உங்கள் தனிப்பட்ட மின்னஞ்சல் கணக்கு அணுகும் விதமாக இருக்க வேண்டும்.

## 2 கல்வித் தகவல்

கீழ்கண்டவை உங்களிடம் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்:

- ❑ தொடக்கப் பள்ளி முதல் ஒவ்வொரு பள்ளி ஆண்டிலும் நீங்கள் முன்பு படித்த பள்ளிகளின் விவரங்கள்:
  - பள்ளியின் பெயர்
  - பள்ளியில் பயிற்றுவிப்பதற்கு பயன்படுத்தப்படும் முதன்மை மொழி
  - கற்றறிந்த மொழி/கள்
  - ஒரு வாரத்திற்கு, மொழிப் படிப்புக்கான மணிநேரம்
- ❑ நீங்கள் வெளிநாட்டுப் பள்ளி/களில் படித்திருந்தால், அந்தந்த ஆண்டிற்கான பள்ளி அறிக்கை/கள்

## 3 குடியிருப்பு தகவல்

நீங்கள் பின்வரும் விவரங்களை வழங்க வேண்டும்:

- ❑ நீங்கள் இதற்குமுன் வசித்த நாடுகள்
- ❑ நீங்கள் இதற்குமுன் சென்ற நாடுகள்
- ❑ உள்நாட்டு வருகை/களுக்கான காரண/ங்கள்
- ❑ உள்நாட்டு வருகை/களின் கால அளவு

## 4 மொழியியல் பின்னணி

நீங்கள் பின்வரும் விவரங்களை வழங்க வேண்டும்:

- ❑ நீங்கள் பேசக் கற்றுக்கொண்ட முதல் மொழி/கள்
- ❑ நீங்கள் பேசக்கூடிய, படிக்கக்கூடிய மற்றும் எழுதக்கூடிய பிற மொழி/கள்
- ❑ நீங்கள் உங்கள் பெற்றோர்/கள் அல்லது பாதுகாவலர்/கள் மற்றும் உங்கள் உடன்பிறப்புகள் மற்றும் நண்பர்களுடன் பேசும் மொழி/கள்

## 5 துணை ஆவணங்கள்

நீங்கள் பின்வரும் ஆவணங்களின் புகைப்படம் அல்லது ஸ்கேன் நகல்களை வழங்க வேண்டும்:

- ❑ பெற்றோர்/பாதுகாவலர் ஒப்புதல் படிவம் (கட்டாயமானது)
- ❑ பாஸ்போர்ட் அடையாளப் பக்கம், பொருந்தினால்
- ❑ சர்வதேச இயக்கப் பதிவு/கள், பொருந்தினால்
- ❑ வெளிநாட்டு பள்ளி அறிக்கை/கள், பொருந்தினால்

**ஒவ்வொரு கோப்பிற்கும் அதிகபட்ச அளவு 4MB** உடன், துணை ஆவணங்களை உங்கள் கணினி அல்லது மொபைல் சாதனத்தில் **.pdf, .jpg, .jpeg** அல்லது **.png** கோப்புகளாகச் சேமிக்கவும். நீங்கள் **Word** ஆவணங்களைப் பதிவேற்ற முடியாது.